# C P A

## CENTRE FOR POLICY ALTERNATIVES

**மா**ற்றுக் **கொ**ள்கைகளுக்கான **நி**லையம்

சுருக்கமான குறிப்பு

# காணாமற்போனோருக்கான அலுவலகம்: சட்டவாக்கத்தையும், அதன்பின்னரான நடைமுறைப்படுத்தல்களையும் வலுப்படுத்தும்வகையில் கவனஞ்செலுத்துவதற்கான முக்கிய விவகாரங்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ஜூலை 2016

**பொதுப்பார்வை**

“இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறலையும், மனிதஉரிமைகளையும் முன்னேற்றும்வகையில்” தீர்மானம் 30/1 இன் பிரகாரம், இலங்கை அரசாங்கம் பல நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளுக்கும், முன்னெடுப்புகளுக்கும் அர்ப்பணவுணர்வை வெளியிட்டது. இவற்றுள் ஒன்று, காணாமற்போனவர்களுக்கான அலுவலகமொன்றைத் (OMP) தாபிப்பதாகும். OMP ஐத் தாபிப்பதற்கான சட்டவாக்க வரைவு இப்பொழுது பாராளுமன்றத்தின் முன்னிலையில் உள்ளது. இது இலங்கையில் காணாமற்போனவர்களின் விவகாரங்களுக்குத் தீர்வுகாண்பதற்கான முதலாவது நிரந்தரமானதும், சுதந்திரமானதுமான அலுவலகமாகும். பலவந்த, தன்விருப்பற்றமுறையில் நபர்கள் காணாமற்போவதுகுறித்து அடுத்தடுத்துவந்த பல விசாரணை ஆணைக்குழுக்கள் இருந்தபோதிலும், இதனால் பாதிப்புற்ற பலர் இன்னமும் உண்மையையும், நீதியையும் தேடியவாறுள்ளனர். OMP பலவருடகாலமாக எதுவித பலனுமின்றி, தமது அன்புக்குரியவர்களைத் தேடிவந்த குடும்பங்களுக்கு நம்பிக்கை வழங்குகின்றது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) நிலைமாற்றுக்கால நீதிக்காக நீண்டகாலமாகப் பரப்புரை செய்துவந்ததோடு, காணாமற்போதல்கள் மற்றும் காணாமற்போன நபர்கள் சம்பந்தமான கொள்கை மாற்றங்கள் உள்ளிட்டவகையிலான உத்தேச சீர்திருத்தங்களைக் கண்காணித்தும் வந்துள்ளது. CPA சமீபத்தில் OMP சட்டமூலம் சம்பந்தமான ஒரு வழிகாட்டலை வெளியிட்டது. அது இந்தக் குறிப்போடு இணைக்கப்பட்டுள்ளது. இதில் சட்டமூலத்தை வலுப்படுத்தும் யோசனைகளும், நடைமுறையாக்கமும், ஒரு வலுவான, சுயாதீனமான அலுவலகம் தாபிக்கப்படுவதை உறுதிசெய்வதும் அடங்கியுள்ளன. இவை பயனுறுதியாக அமையவேண்டுமெனில், OMP உண்மைகளைக்கண்டறிவதற்கும், ஒரு பாதிப்புற்றவர் நலன் அணுகுமுறையினுள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவுவதற்கு அவசியமான அதிகாரங்களைக்கொண்டிருத்தல் வேண்டும்.

இச்சட்டமூலம் முக்கியமான விவகாரங்கள் சம்பந்தமாக பாதிப்புற்றோர் மத்தியிலும், சிவில் சமூகத்திலும் பெரும் எண்ணிக்கையிலான விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. அவற்றுள் ஒரு சிலவற்றைப்பற்றி நாம் கீழே கலந்துரையாடுகின்றோம். சட்டமூலத்தின் சில குறித்துரைப்பான ஏற்பாடுகள்குறித்து, அரச சார்பற்ற மற்றும் உயிர்பிழைத்தோர் அமைப்புகள் மத்தியில் சில உடன்பாடின்மைகள் காணப்பட்டபோதிலும், பாதிப்புற்றோர் OMP யின் பணியின் நடுநாயகமாக விளங்கவேண்டுமென்பதுகுறித்தும், பாதிப்புற்றோர் நலன்குறித்த அணுகுமுறையொன்று தீர்மானகரமானதென்பதுகுறித்தும் பரந்த அளவிலான கருத்தொருமிப்புக் காணப்படுகின்றது. உண்மை மற்றும் நீதிக்கான பாதிப்புற்றோரின் உரிமையே அதன் துடிப்பான செயற்பாடுகளுக்கான கோட்பாடாகவிருத்தல் வேண்டும். இவ்வாறாக, OMP விடயங்களை அறிந்துகொள்வதற்கான குடும்பங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையிலும், விசேட நீதிமன்றத்தினூடாக அல்லது தற்போதுள்ள குற்றவியல் நீதி முறைமையினூடாகக் குற்றமிழைத்தோரை பொறுப்புக்கூறவைக்கும் எதிர்கால முயற்சிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்யும் வகையிலும் ஒரு முதனிலையான, மனிதாபிமானப் பணிப்பாணையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இதுவிடயத்தில், OMP ஆரம்பத்திலேயே மனிதாபிமான மற்றும் வழக்குத்தொடரல் குறியிலக்குகளிடையே எழக்கூடிய பதற்றநிலைகளைக் குறைக்கும்வகையிலான நடவடிக்கைகளை உறுதிசெய்வதற்கான அர்த்தப்பொதிவுள்ள, தெளிவான வழிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். CPA அமைப்பு ஒரு பக்கத்தில் உண்மைக்கும், நீதிக்கும் மறுபுறத்தில் இந்த விவகாரங்களுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கான தேவைக்குமிடையிலான சில விட்டுக்கொடுப்புகள்குறித்து எழுப்பப்படும் சில கரிசனைக் கவலைகள் குறித்தும் அவதானித்துள்ளது.

OMP யின் பணிப்பாணையை வலுப்படுத்தும் வகையில் இலங்கையில் ஏனையோரினால் முன்வைக்கப்படும் பல சமர்ப்பணங்களை அவதானிக்கும் அதேவேளை, CPA உண்மையும், நீதியும் நிலைநாட்டப்படுவதை உறுதிசெய்யும் வகையில் குறித்துரைப்பான சில விதப்புரைகளை மேற்கொள்ளுகின்றது. இக்குறிப்பு ஓர் அனைத்துமடங்கும் தீர்வைக் கொண்டிருக்கவில்லை. CPA எதிர்காலத்தில் ஏனைய முக்கியமான சட்ட மற்றும் கொள்கை விவகாரங்கள் குறித்த விடயங்களை முன்வைக்கும்வகையில் OMP யுடன் ஈடுபட்டுப் பணியாற்றவுள்ளது. இங்கு முன்வைக்கப்படும் பிரேரணைகள் OMP யின் பணிப்பாணையை வலுப்படுத்தும் முதனிலை நோக்கத்துடன், ஏனைய சூழமைவுகளிலிருந்து கிட்டிய பாடங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

## 1. **அர்ப்பணிப்புணர்வுகொண்ட ஒரு சட்ட மருத்துவ அலகை அல்லது அணியை நிறுவுதல்**

சட்டமருத்துவ விசாரணைகள் காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்து, இனங்காணும் பணியில் இன்றியமையாதவையாகும். பலவந்த அல்லது தன்விருப்பற்றமுறையில் ஆட்கள் காணாமற்போதல் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக்குழு 2015 நவம்பரில் இலங்கைக்கு விஜயம்செய்தபின்னர் இலங்கையின் காணாமற்போனோர் குறித்த பொறிமுறை "சட்ட மருத்துவத்துறைத் தேர்ச்சி உள்ளிட்டவகையிலான, புதைத்த உடல்களைத் தோண்டியெடுக்கும் தொழில்நுட்ப ஆற்றலைக்கொண்டிருத்தல் வேண்டும்"[1] என்று தெரிவித்தது. பக்கச்சார்பற்ற, பயனுறுதிமிக்க விசாரணைகளை உறுதிசெய்வதற்கு சட்ட மருத்துவ மனித நாகரீகவியல், புதைபொருள் ஆராய்ச்சி மற்றும் நோயியல் நிபுணர்களைப் பதவியினராகக்கொண்ட ஒரு சுயாதீன, மையப்படுத்தப்பட்ட அலுவலகம் இருப்பது தீர்மானகரமானதாகும். 2012 தொடக்கம் மாத்தளையிலும், மன்னாரிலும், களுவாஞ்சிக்குடியிலும் பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைபோன்ற ஏனைய புதைகுழிகள் இருப்பது சாத்தியமேயாகும். OMP யினுள் பணியாற்றும் சட்ட மருத்துவ நிபுணர்கள் திகதியிடல், இப்புதைகுழிகளைத் தோண்டி மனித எச்சங்களை வெளியிலெடுத்தல், பலியானோரை இனங்காணுதல், மரணத்தின் காரணத்தைத் தீர்மானித்தல் மற்றும் முறையான துக்கம் அனுஷ்டிப்பு மற்றும் புதைவினை என்பவற்றை உறுதிசெய்வதற்காக உடல்களைக் குடும்பத்தினரிடம் கையளித்தல் செயல்முறையை வழிநடத்துதல் வேண்டும்.

---

[1] _(9-18 நவம்பர்2015) இலங்கைக்கான விஜயத்தின் இறுதியில் பலவந்த அல்லது தன்விருப்பற்ற முறையில் ஆட்கள் காணாமற்போதல் சம்பந்தமான ஐ.நா. செயற்பாட்டுக் குழுவின் பூர்வாங்க அவதானிப்புரைகள்_ _huup://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplyNews.aspx?NewsID=16771&LangID=E#sthash.mVg4dEyv.dpuf(last visited 18 July 2016)_

OMP சட்டமூலம் ஏற்கெனவே ஒரு சட்ட மருத்துவ அலகுக்கான அடிப்படை விடயங்களுக்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளபோதிலும், இவை பின்வரும் வழிகளில் தெளிவுபடுத்தப்பட்டு, விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்:

- 11(a) வாசகம் OMP க்கு "(சட்ட மருத்துவ அல்லது ஏனைய) தொழில்நுட்ப ஆதரவு, பயிற்சி மற்றும் கூட்டுப்பணி என்பவற்றைப் பெற்றுக்கொண்ட ..... அவசியமானவிடத்து, எவராவது நபருடன் அல்லது கூட்டிணைப்புப்பெற்ற அல்லது அவ்வாறில்லாத உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அமைப்புடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கான" அதிகாரத்தை வழங்கியுள்ளது.

- OMP யின் விசாரணை அதிகாரங்கள் சம்பந்தமாக 12(d) வாசகம் " OMP ஆட்புல நியாயாதிக்கங்கொண்ட பொருத்தமான நீதவான் நீதிமன்றுக்கு விண்ணப்பித்து, சந்தேகத்துக்குரிய கல்லறைப்பகுதிகளைத் தோண்டுதல் மற்றும் / அல்லது உடல்களை வெளியிலெடுத்தலுக்கான ஒரு கட்டளையைப் பெற்றுக்கொண்டு, இத்தகைய தோண்டுதல் அல்லது உடல்களை வெளியிலெடுக்கும்போதும், மற்றும் இவற்றோடு தொடர்புற்ற ஏனைய நடவடிக்கைகளின்போதும் ஓர் அவதானிப்பாளராகவிருத்தலுக்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது" எனக் குறிப்பிடுகின்றது. **சட்டமூலத்தின் விடய வாசகம் OMP க்கு "அவதானிப்பாளராகச் செயற்படுவதற்கு" மாத்திரமன்றி, தோண்டுதல் மற்றும் உடல்களை வெளியிலெடுத்தல்களை வழிநடத்துவதற்கும், கூட்டிணைப்புச் செய்வதற்கும், (நடாத்துவதற்குமான) தலைமைதாங்குதல் அதிகாரத்தை வழங்கும்வகையில் திருத்தப்பட வேண்டும். OMP சகல சட்ட மருத்துவச் சான்றுகளினதும் பிரத்தியேகமான கட்டுக்காவல் மற்றும் வெளியார் பரிசோதனைகள் மற்றும் துறைத்தேர்ச்சிகளைக் கூட்டிணைப்புச் செய்யும் பொறுப்பைக்கொண்டிருத்தல் வேண்டும். தோண்டுதல்கள் மற்றும் உடல்களை வெளியிலெடுத்தல் செயல்முறைகளின்போது நீதவான் நீதிமன்றத்தின் பாத்திரத்தை CPA அவதானித்தபோதிலும், இப்பணி இந்த விடயப்பரப்பில் அனுபவம்வாய்ந்த தனிநபர்களால் செய்யப்படுவதை உறுதிசெய்வது தீர்மானகரமானதாகும். இவ்வாறாக, நீதவான் நீதிமன்றம் தனது ஆட்புல நியாயாதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் அதேவேளையில், OMP யின் சட்ட மருத்துவ அணி தனது பணிப்பாணையை நிறைவேற்றும் சுயாதினத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- 17 வது வாசகம் "காணாமற்போனவர்களை அடையாளம் கண்டு தேடுவதற்கும், இத்தகைய காணாமற்போதலுக்கான சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்த உதவுவதற்கும், இத்தகைய காணாமற்போன நபரின் இருப்பிடம் அல்லது அவருக்கு நேர்ந்த கதி சம்பந்தமாக அறிந்துகொள்வதற்கும் பொறுப்பான" ஒரு தடயமறிந்து கண்டுபிடிக்கும் அலகுக்கான ஏற்பாட்டைக்கொண்டுள்ளது. இந்த அலகு இயைபுள்ள தொழில்நுட்ப மற்றும் சட்ட மருத்துவத் தேர்ச்சி உள்ளிட்டவகையிலான தேர்ச்சியும், அனுபவமும். தகைமையுங்கொண்ட விசாரணையாளர்களை உள்ளடக்கவேண்டும்" என்று அது மேலும் தெரிவிக்கின்றது. **OMP ஒரு தனிவேறான சட்ட மருத்துவ அலகை**

**அல்லது அணியை நிறுவவேண்டும் அல்லது தடயமறிந்து தேடும் அலகு அவசியமான திறன்கள், மூலவளங்கள் மற்றும் ஆளணியினரைக் கொண்டிருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.**

சட்ட மருத்துவ விசாரணைகள்குறித்த ஏனைய நாடுகளின் அனுபவங்கள் இலங்கை தனது சொந்த நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைக்கையில் கவனத்தில்கொள்ள வேண்டிய பயனுள்ள மாதிரிகளை வழங்கிநிற்கின்றன. ஆகுசெலவுகள் அதிகுறைவானவையும், பயனுறுதி அதிகூடுதலானவையுமான சட்ட மருத்துவ அலகுகள் குடும்பங்களைச் செயல்முறையின் நடுநாயகமாக வைத்தமைத்துள்ளன. இவை லத்தீன் அமெரிக்காவில் இடம்பெற்ற, சிவில் சமூகக்குழுக்களால் வழிநடத்தப்பட்ட சட்ட மருத்துவ மனித நாதகரீகவியல் குறித்த பெருவியன் அணி (EPAF), ஆர்ஜென்ரீனாவின் சட்ட மருத்துவ நாகரீகவியல் அணி (EAAF), கொசோவோவில் காணாமற்போன நபர்கள் மற்றும் சட்ட மருத்துவம் சம்பந்தமான அலுவலகம் (OMPF) மற்றும் கௌதமாலாவின் சட்ட மருத்துவ மனித நாகரீகவியல் மன்றம் (FAFG) என்பவற்றை உள்ளடக்குபவையாகும். இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் சட்ட மருத்துவ சான்றுகளின் பிரத்தியேகமான கட்டுக்காவல் அதிகாரத்துடன் ஒரு தனியான, சுயாதீனங்கொண்ட சட்ட மருத்துவ அலகு தாபிக்கப்பட்டமை சாத்தியமான சான்றுகளைத் திரிபுபடுத்துதல் மற்றும் தவறாகக் கையாளுதல் என்பவற்றைத் தடுத்து, எதிர்காலக் குற்றவியல் விசாரணைகளுக்காகவும், வழக்குத்தொடரல்களுக்காகவும் அவற்றைப் பாதுகாத்துவைப்பதை உறுதிப்படுத்தியது. ஒவ்வொரு அலகும் ஒரு விசாரணை வழிநடத்தல் அணுகுமுறையைக் கையாண்டு மரணத்துக்குமுன்னரான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் காணாமற்போனவர்களின் குடும்பங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றி (உடல் தோற்ற விபரிப்பு, வயது, அணிந்திருந்த ஆடைகள், காணாமற்போன திகதி போன்றவை) இவற்றைப் பயன்படுத்தி தற்போதுள்ள மனித எச்சங்களையும், சாத்தியமான பாரிய மனிதப்புதைகுழி இடஅமைவுகளையும் இனங்கண்டது. சட்ட மருத்துவ நிபுணர்கள் இதன்பின்னர் மரணத்துக்கு முன்னரான தரவுகளையும், மரணத்துக்குப் பின்னரான தரவுகளையும் ஒப்புநோக்கி, (நோயியல், மனித நாகரீகவியல் மற்றும் சட்ட மருத்துவ விசாரணைகளிலிருந்து கிட்டிய விடயச்சான்றுகள்) பலியானவரைச் சாத்தியமான வழிகளில் இனங்கண்டனர்[2].

கொசோவோவில் OMPF ஒரு நீண்ட காலப்பகுதியில், குடும்பங்களுடன் இடம்பெற்ற நேர்காணல்களினூடாகவும், விசாரணை நிலைமைகுறித்த ஒளிவுமறைவற்ற தொடர்பாடல்கள் மூலமாகவும் மரணத்துக்கு முன்னரான தரவுத்தளமொன்றை அபிவிருத்தி செய்தது. சரியான வழிமுறைகளை அபிவிருத்திசெய்வதில் குடும்பங்களை நடுநாயகமாக வைத்தமைத்ததன் மூலம் OMPF முதலில் உயர் ஆகுசெலவுகொண்ட, பலியானோரை இனங்காணும்வகையிலான DNA ஆய்வுகூடங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக்கொண்டது. பின்னர் குடும்பங்கள் வேண்டிக்கொண்டதன்பேரில் மாத்திரமே, அல்லது மரணத்துக்கு முன்னரான தரவுகள் போதாதநிலையில் மாத்திரமே ஒப்புறுதிப்படுத்துவதற்காக DNA

[2] *காணாமற்போன நபர்கள் மற்றும் சட்ட மருத்துவவியல் அலுவலகம், செயற்பாடுகள் அறிக்கை 2002-2004*

பரிசோதனைகள் பயன்படுத்தப்பட்டன. OMPF காணாமற்போன நபர்களுக்கான சர்வதேச ஆணைக்குழுவுடன் (ICMP) சகல DNA பரிசோதனைகளையும் நடத்துவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டது[3]. OMP யும் தேவைக்கேற்றவாறு DNA பரிசோதனைகளுக்காக சுயாதீனமான, வெளியக செயற்பாட்டாளர்களுடன் ஓர் ஏற்பாட்டைச் செய்துகொள்ளலாம்.

**விதப்புரை: நீதவான் நீதிமன்று ஆட்புல நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் அதேவேளையில், OMP பாரிய புதைகுழிகளைத் தோண்டி, உடல்களை வெளியே எடுப்பதற்கான தனிப்பொறுப்பைக் கொண்டதும், விசாரணைகளுக்காக தற்போதைய மற்றும் எதிர்காலக் கல்லறையிடங்களையும் பாதுகாப்பாகக் கட்டுப்படுத்துவதுமான ஓர் அர்ப்பணவுணர்வுகொண்ட, சட்ட மருத்துவ அலகை அல்லது அணியை வைத்திருத்தல் வேண்டும்.**

## 2. வழக்குத்தொடரல் சம்பந்தமான தொடர்பிணைப்புகளைத் தெளிவுபடுத்துதல்

அரசாங்கம் உண்மை, மற்றும் நீதி வழங்கப்படுமென்று வாக்குறுதியளித்துள்ளது. ஆயினும், OMP, உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, மற்றும் விசேட நீதிமன்றம் எந்த ஒழுங்கில் அமைக்கப்படுமென்பதும், அவற்றுக்கிடையே எத்தகைய தொடர்பிணைப்புகள் நிலவுமென்பதும் தெளிவற்றதாகவேயுள்ளது. சட்டமூலம் வழக்குத்தொடரல் அதிகாரிகளுக்கு வழக்குகளை ஆற்றுப்படுத்துவதற்கான தற்றுணிபு உள்ளிட்டவகையில், ஏனைய அரசாங்க தனியதார்த்த அமைப்புகளுடன் விடயங்களை மேலெடுத்தல் சம்பந்தமான அதிகாரங்களை OMP க்கு வழங்குகின்றது. 12(i) வாசகம் குற்றவியல் விசாரணைக்கு வழிவகுக்கும் தவறொன்று இழைக்கப்பட்டிருக்கலாமென்று OMP கருதும்பட்சத்தில், OMP அதை "இயைபுள்ள சட்ட நடைமுறைப்படுத்தல் அல்லது வழக்குத்தொடரல் அதிகாரசபைக்கு அறிக்கையிடலாம்" என எடுத்துரைக்கின்றது.

OMP யின் முதனிலைக் கவனம் அறிந்துகொள்வதற்கான பாதிப்புற்றவர்களின் உரிமைமீதாக இருக்கவேண்டும் என்பதை அவதானிக்கும் அதேவேளையில் CPA உண்மையையும், நீதியையும் ஊக்குவிக்கும் வகையிலான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதிலும், ஒன்றைப்பெற்றுக்கொள்வதற்காக மற்றதைத் தியாகம்செய்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டுமென்பதிலும் உறுதியாகவுள்ளது. இவ்வாறாக, உண்மை அடுத்தபடியாக எவ்வாறு வகைப்பொறுப்புக்கு இட்டுச்செல்லும் என்னும் விடயத்துக்குக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

தென்னாபிரிக்கா, பொஸ்னியா மற்றும் ஈராக் உள்ளிட்டவகையில் ஏனைய பல தேசங்கள் தமது நீதித் திணைக்களங்களின்கீழ் அல்லது வேறு அரசாங்கத் திணைக்களங்களின்கீழ் காணாமற்போனவர்களுக்கான அலுவலகங்களை நிர்மாணித்துள்ளன. எவ்வாறாயினும், அந்த

---

[3] *காணாமற்போன நபர்கள் மற்றும் சட்ட மருத்துவவியல் அலுவலகம், செயற்பாடுகள் அறிக்கை 2002-2004*

விடயநிகழ்வுகளில், தீர்மானத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளவாறான ஒரு விசேடமான பொறிமுறைபோலன்றி, சாதாரண குற்றவியல் நீதிமுறைமையே குற்றங்களை விசாரணை செய்யும் பொறுப்பைக்கொண்டிருந்தது. நிலைமாற்றுக்கால நீதி, மற்றும் அர்ப்பணிப்புப் பொறுப்புகளை நிறைவேற்ற ஆரம்பிப்பதில் தாமதங்களை வைத்து நோக்குகையில், ஒன்றையடுத்தொன்றாக உண்மை மற்றும் நீதிகுறித்த பொறிமுறைகள் ஏற்படுத்தப்படுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அமைச்சர் மங்கள சமரவீரவின் சமீபத்திய கூற்றுக்கள் OMP முதலாவது பொறிமுறையென்பதும், பொறுப்புக்கூறலுக்கான பிரேரணைகள் அதைத் தொடர்ந்து வருமென்பதும் எடுத்துரைக்கின்றன[4].

மேலே கூறப்பட்டவாறு, ஓர் அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட சட்ட மருத்துவ அலகைத் தாபிப்பது பொறுப்புக்கூறலுக்காகப் பரப்புரை மேற்கொள்ளும் தரப்பினர்களின் கரிசனைக் கவலைகள் சிலவற்றைப் போக்குவதாக அமையும். இத்தகைய ஓர் அலகு சட்ட மருத்துவ நுட்பங்களின் தரநியமப்படுத்தல் மற்றும் எதிர்காலக் குற்றவியல் விசாரணைகளில் பயன்படக்கூடிய சான்றுகளின் பேணல் பாதுகாப்பு என்பவற்றைச் சாத்தியமாக்கும். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கை மாத்திரம் போதாது. அடுத்துவரும் வழக்குத்தொடரல்களை உறுதிசெய்யக்கூடிய ஆரம்ப விசாரணைகளின் சட்டக்கூறுகள் குறித்த கவனம் மிகவும் அவசியமானதாகும். வழக்குகளை வழக்குத்தொடரல் அதிகாரசபைகளுக்கு ஆற்றுப்படுத்தும் அதிகாரத்தை OMP கொண்டிருந்தபோதிலும், இது வெறுமனே ஒரு தற்றுணிபு அதிகாரமென்பதோடு, இது வழக்குகளை ஆற்றுப்படுத்தும் OMP அங்கத்தவர்களைப் பொறுத்தவிடயமாகும்.

பல நாடுகள், பல முக்கிய அரசாங்கச் செயற்பாட்டாளர்களின் இணைவுமுழுமைப்பணிப் பாத்திரங்களுடன் உண்மைக்கும், நீதிக்குமிடையிலான நிறுவன உறவிணைப்புகளை ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக- தென்னாபிரிக்காவில் ஒரு காணாமற்போனோர் பணி அணியொன்று தேசிய வழக்குத்தொடரல் அதிகாரசபையயினுள் தாபிக்கப்பட்டது. அதன் பிரதான குறிக்கோள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின்சார்பில் உடல் எச்சங்களை மீட்டெடுத்துக் கொடுப்பதாகும். ஆயினும் அது திரட்டிய சான்றுகள் குற்றவியல் வழக்குத் தொடரல்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய சாத்தியங்களும் இருந்தன[5]. பொஸ்னியாவிலும், ஹெர்சிகொவீனாவிலும்(BiH) 2013 மேயில் அரச வழக்குத்தொடுநர் அலுவலகம் BiH சவச்சாலைகளில் எச்சங்களை இனங்காணலுக்கான பொறிமுறையொன்றைத் தாபித்தது.

---

[4] ***http://www.media.gov.lk/news-archives/575-statement-by-foreign-minister-mangala-samaraweera-to-the-32nd-gession-of-the-un-human-rights-ouncil; http://www.sundayobserver.lk/2016/07/17/po104.asp***

[5] ***http://www.icmp.int/press-release/icmp-assists-south-africa; http://www.icmp.int/where-we-work/africa/south-african-republic/; http://www.csvr.org.za/index.php/media-articles/latest-csvr-in-the-media/2312-the-establishment-of-the-south-african-disappearnace-task-team-the-roots-for-a-regional-network.html; https;//www.theguardian.com/global/2015/jun/06/odd-couple-apartheid-activist-madwleine-fullard-convicted-policeman-engene-de-kock; http://www.iol.co.za/sunday-tribune/digging-up-the-dirt-1230973***

இது உள்ளூர் வழக்குத்தொடுநர் அலுவலகங்கள், பொஸ்னியா மற்றும் ஹெர்சிகொவீனாவின் காணாமற்போன நபர்கள் நிறுவகம் (MPI), சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், நோயியல் நிபுணர்கள் மற்றும் ஏனையோருக்கிடையிலான ஒரு சர்வ முகவர் நிலைய உடன்படிக்கைக்கு இட்டுச்சென்றது[6]. MPI கல்லறைகளின் சாத்தியவள இடஅமைவு குறித்து நீதித்துறைக்கு அறிவித்தது. பின் விசாரணைகளுக்கான நீதிமன்றக்கட்டளைகளைக் கோரியது. அதன்பின்னர் தனியான மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டுதல், உடல்களை வெளியிலெடுத்து அவற்றை இனங்காணுதல் செயல்முறையில் பங்கேற்றது. மானிட நாகரீகவியல் பரிசோதனைகளும், பிரேத பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. தனது முறைக்கு வழக்குத்தொடுநர் அலுவலகம் தோண்டிய உடல்களை வெளியிலெடுத்தல் மற்றும் இனங்காணல் செயல்முறைக்குத் தலைமைதாங்கி, யுத்தக்குற்றங்கள் சம்பந்தமான வழக்குகளைக் கட்டியெழுப்பியது[7].

ஏனைய மாதிரிகளையும் கவனத்திற்கொள்வது பெறுமதிவாய்ந்ததாகும். கொசோவோவில் OMPF குற்றச்செயல்களை விசாரணைசெய்யும் பணிப்பாணையைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும், அது ஐக்கிய நாடுகள் இடைக்கால நிர்வாகப் பணிக்குழுவின் (UNMIK) பொலிஸூடன்[8] தகவல்களைப் பகிர்ந்துகொண்டது. OMPF உடல்களைத் தோண்டியெடுத்து, பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு, ஏதாவது நீதிமன்ற உத்தரவுக்குப் பிரதிவினையாக மனித எச்சங்களை அடையாளங்காணும் பிரத்தியேக அதிகாரத்தைக்கொண்டிருந்தது. OMPF கட்டமைப்பு ஒரு மருத்துவப்பரிசோதகர் அலுவலகத்தையும் உள்ளடக்கியிருந்தது. இந்த அலுவலகம் விசாரணை மற்றும் வழக்குத் தொடரலுக்கான சான்றுகளைத் திரட்டியதோடு, UNMIK நீதித்திணைக்களத்துக்கு மருத்துவ சட்டவியல் மற்றும் சட்ட மருத்துவத்துறைத் தேர்ச்சிகளையும் வழங்கியது[9].

2006 இல் ஈராக்கில், பாராளுமன்றம் பாரிய மனிதப் புதைகுழிகளைப் பாதுகாக்கும் சட்டமொன்றை நிறைவேற்றியது. இது மனித உரிமைகள் அமைச்சுக்குப் பாரிய மனிதப் புதைகுழியிலிருந்து உடல்களைத் தோண்டியெடுத்தல், மற்றும் குற்றவியல் வழக்குத் தொடரல்களில் பயன்படுத்தப்படக்கூடிய சான்றுகள்குறித்த ஆவணப்படுத்தல் பொறுப்புகளை வழங்கியது. அமைச்சு நீதிமன்ற முறைமையுடனும், வழக்குத் தொடுநர் அலுவலகத்துடனும், சட்ட மருத்துவ நிபுணர்களுடனும், ஏனையோருடனும் கூட்டாகப் பணியாற்றியது[10]. சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட குறியிலக்குகள் பாரிய புதைகுழிகளின் பாதுகாப்பு, பலியானோர் மற்றும் குற்றமிழைத்தோரை இனங்காணுதல், குற்றவியல் வழக்குத்தொடரல்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய சான்றுகளைத் திரட்டுதல் மற்றும் இத்தகைய சான்றுகளை நீதிமன்றங்களுக்கு வழங்குதல் என்பவையாக அமைந்திருந்தன.

---

6 *http://www.icmp.int/where-we-work/europe/western-balkans/bosnia-and-herzegovina/*

7 *http://www.icmp.int/wp-content/uploads/2014/08/locating-and-identifying-missing-persons-a-guide-for-families-in-bih-pdf*

8 *UNMIK was established at the end of the war in Kosovo in 1999 as the interim authority which would ease the transition to self-government and autonomy*

9 *Office on Missing Persons and Forensics, Activity Report 2002-2004*

10 *http://www.icmp.int/where-we-work/middle-east-and-north-africa/irag*

ஒரு பாரிய புதைகுழி கண்டறியப்பட்ட ஒவ்வொரு பிராந்தியத்திலும் அமைச்சு ஓர் ஆணைக்குழுவை அமைக்கும். இதில் ஓர் அமைச்சுப் பிரதிநிதி, ஒரு நீதிபதி, வழக்குத் தொடுநர், பொலிஸ் உத்தியோகத்தர், சட்ட மருத்துவ நிபுணர், மற்றும் மாநகர சபைப் பிரதிநிதி என்போர் அங்கம் வகிப்பர். ஆணைக்குழு பாரிய புதைகுழிகளைத் தோண்டுதல், உடல்களை வெளியே எடுத்தல், எச்சங்களை இனங்காணுதல், பதிவேடுகளைப் பேணிப் பாதுகாத்தல், எச்சங்களை உரியவர்களுக்கு அனுப்பிவைத்தல், மற்றும் அடையாள ஆவணங்களை வழங்குதல் என்பவற்றுக்குப் பொறுப்பாகவிருக்கும். சட்டம் ஆணைக்குழுவுடன் ஒத்துழைத்த குற்றவாளிகளுக்கு "குற்றவாளியொருவர் அமைச்சுக்கு அல்லது இயைபுள்ள அதிகாரிகளுக்கு பாரிய புதைகுழி இடஅமைவுகளை அறிவித்தால், அல்லது பலியானோர் அல்லது குற்றமிழைத்தோர் குறித்த தகவல்களை வழங்கினால் அது குற்றவாளியைப் பொறுத்தவரையில் ஒரு குற்றத்தணிப்பு விடயமாக நோக்கப்படும்" என்று தெரிவிப்பதன்மூலம் அவர்களுக்குச் சட்ட நிவாரணத்தை வழங்கியது[11].

கௌதமாலாவில் சட்ட மருத்துவ, மானிட நாகரீகவியல் அணி (FAFG) பாரிய மனிதப் புதைகுழியிலிருந்து உடல்களை மீட்டெடுத்துள்ளது. அது காணாமற்போன குடும்ப அங்கத்தினர்களை அடையாளங்கண்டு கௌதமாலாவிலும், ஸ்பெயினிலும் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் சான்றுகளை வழங்கியுள்ளது[12]. FAFG பொதுமக்கள் அமைச்சு, நீதித்துறை மற்றும் சட்ட மருத்துவ விஞ்ஞானங்கள் தேசிய நிறுவகம் என்பவற்றுடன் கூட்டிணைப்பாகப் பணியாற்றி, சான்றுகள் மற்றும் விசாரணைகள் குறித்த அறிக்கைகளைப் பேணிப்பாதுகாத்து, அவற்றைக் குற்றவியல் நீதி முறைமையின் அங்கத்தவர்களுடன் பகிர்ந்துகொள்ளுகின்றது[13]. FAFG 1992 முதல் " IAC (சர்வதேச ஆயுத மோதல்) சம்பந்தமுற்ற சட்டரீதியான வழக்குகள் குறித்த மானிட நாகரீகவியல் நிபுணர்களின் 1400 அறிக்கைகளுக்கான சட்ட மருத்துவச்சான்றுகளை கௌதமாலாவின் நீதி முறைமைக்கும் பொது வழக்குத்தொடுநர் அலுவலகத்துக்கும் வழங்கியிருப்பதாகத்" தெரிவித்துள்ளது[14]. இச்செயல்முறையை இலகுபடுத்தும்வகையில் FAFG ஒரு குழுவை ஒழுங்கமைத்துள்ளது. இதில் FAFG, மனித உரிமைகள் வழக்குத் தொடுநர் அலுவலகம், வழக்காளிகளின் சமூக அமைப்புகள் என்பவை அடங்குகின்றன. இது கூட்டுப்பணியை ஊக்குவித்து, பயனுறுதியுள்ள வழக்குத்தொடரல்களை உறுதிசெய்யும் யுக்திகளை அபிவிருத்தி செய்கின்றது[15].

2009 இல் இடம்பெற்ற திருப்புமுனை வழக்கொன்றில், கௌதமாலா நீதிமன்றமொன்று நாட்டில் பலவந்தமாக ஆட்களைக் காணாமற்போகச்செய்த குற்றம் சம்பந்தமான வரலாற்றில் முதல் தடவையாக ஒரு தண்டனைத்தீர்ப்பை வழங்கியது. எவ்வாறாயினும், இந்த வழக்கு அவர்களுக்குப் பலியானோரின் உடல்கள் எங்குள்ளனவென்பதை வெளியிடுவதற்கு எவ்வித ஊக்குவிப்பும் வழங்காத ஒரு முறைமையின் குறைபாடுகளையும் எடுத்து விளக்குவதாகவிருந்தது. நீதிமன்றம் 1980 களின் ஆரம்பத்தில் ஆறு கௌதமாலாப்

---

11 *http://www.icmp.int/wp-content/uploads/2014/08/law-on-protection-of-mass-graves.pdf*
12 *http://www.icmp.int/news/accountability-for-the-missing-and-disappeared-in-guatemala*
13 *http://fafg.org/en/causas/*
14 *http://fafg.org/en/acceso-a-la-justicia/*
15 *http://fafg.org/en/lo-que-hacemos*

பிரஜைகள் காணாமற்போகச்செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டமைக்காக முன்னாள் இராணுவ ஆணையாளர் பிலிப்பே குசாரெனோ கொஜ் என்பவருக்கு 150 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. தண்டனைத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது நீதிமன்றத்திலிருந்த பலியானோரின் குடும்பங்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தபோதிலும், குசாரெனோ கடத்தப்பட்டவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடம் சம்பந்தமாக விசாரணைக்குமுன்னரோ அல்லது விசாரணையின்போதோ எவ்வித தகவல்களையும் வெளியிட மறுத்ததுகுறித்து ஏமாற்ற உணர்வை வெளியிட்டனர். இதன்விளைவாக, அவர்களின் அன்புக்குரியவர்களின் உடல்கள் எங்குள்ளன என்பதற்கான விடைகளோ, புதைவினைச் சடங்குகள் அல்லது துக்கம் அனுஷ்டிப்பதற்கான எதுவித சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. குசாரெனோ வழக்கு பாதிப்புற்றோர் உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமையைப் புறக்கணிக்கும் வகையிலான குற்றவியல் வகைப்பொறுப்பு அணுகுமுறை குறித்து கவனம் செலுத்துவதன் இடர்களை எடுத்து விளக்குவதாகவுள்ளது. OMP க்கும், வழக்குத்தொடுநர்களுக்குமிடையிலான ஏதாவது நிறுவனரீதியான ஏற்பாடுகள் குற்றமிழைத்தோர் தகவல்கள் வழங்கும் சாத்தியக்கூறுகளை அதிகரிப்பதற்குக் காணாமற்போதல் சம்பந்தமான விசாரணைகளின் மனிதாபிமான அம்சங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். அதேவேளையில், இலங்கையர்கள், உண்மையான தேடுதல் குற்றவியல் பொறுப்புக்கூறல் சம்பந்தமான பிரயத்தனங்களுடன் உடன்செல்லாத மாதிரிகள் குறித்து அவதானமாகவும் இருத்தல்வேண்டும். உதாரணமாக - சைப்பிரஸில் காணாமற்போனோர் சம்பந்தமான குழு வழக்குத்தொடரல்களோடு எந்தவித தொடர்பிணைப்புகளையும் கோண்டிருக்கவில்லை. அதன் பணிப்பாணை, “குழு எவராவது காணாமற்போன நபர்களின் மரணம் யாரால் விளைவிக்கப்பட்டதென்பதைத் தெரிவிப்பதற்கோ, இத்தகைய மரணங்களின் காரணம் சம்பந்தமாகத் தேடியறிந்துகொள்ளவோ முயற்சிசெய்யமாட்டாது” எனத் தெரிவிக்கின்றது. வழக்குத்தொடுநர்களோடு ஒரு நிறுவனரீதியான உடன்பாடு இல்லாதவிடத்து, தண்டனைப் பயமின்மையே கோலோச்சுகின்றது[16].

இக்காரணத்தினால், OMP ஒரேநேரத்தில் குற்றவியல், விசாரணைகளுக்கு ஆதரவளித்து, காணாமற்போனோரைத் தேடியறிவதில் குற்றமிழைத்தோரின் ஒத்துழைப்பை ஏதோவொரு வழியில் ஊக்குவித்தல் வேண்டும். டுனீஷியாவும், பெருவும் நீதியைச் தியாகம் செய்யாமல் உண்மையைக்கண்டறியும் முன்னுரிமையுடன்கூடிய வழிகளினூடான நிறுவனங்களை வடிவமைத்தன. டுனீஷியா 2010 ஆம் ஆண்டின் மக்கள் எழுச்சிகளின் பின்னர் உண்மையையும், வகைப்பொறுப்பையும் சமமான முன்னுரிமைகளாக அங்கீகரித்தது. 2013 இல் டுனீஷிய அரசாங்கம் இடைமாற்றக்கால நீதியைத் தாபித்து, ஒழுங்குபடுத்தும் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டத்தின் 4 ஆம் உறுப்புரை “காணாமற்போன நபர்கள், மரணங்கள், மற்றும் பலவந்தம்மூலம் இடம்பெற்ற காணாமற்போதல்கள் குறித்த விசாரணைகளுக்கு மேலதிகமாக, குற்றமிழைத்தவர்களும் இனங்காணப்பட்டு, அவர்களுக்கெதிரான வழக்குத்தொடரல்களும் இடம்பெறுதல் வேண்டும்” என்று தெரிவிக்கின்றது[17].

---

16 *http://www.cmp-cyprus.org/about-the-cmp/terms-ofreference-and-mandate*

17 *http://www.icmp.int/the-missing/where-are-the-missing/tunisia/*

இவ்வாறே, பெருவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) ஆரம்பப்படிநிலைகளில் சார்த்துதல்பெற்ற குற்றமிழைத்தோரை இனங்காணுவதில் மிகவும் துடிப்பான ஒரு பாத்திரத்தை வகித்தது. பின்னர் இவர்களுக்கெதிரான குற்றவியல் வழக்குத்தொடரல்கள் இடம்பெற்றன. உள்ளமைவு பெற்ற "நீதிமுறை தேடல்" பொறிமுறையொன்று TRC இத்தகைய சார்த்துதல் பெற்ற குற்றமிழைத்தோர் குறித்து விசாரணை நடாத்தவும், அவர்களின் பெயர்களை வெளியிடவும் உதவியது[18]. OMP க்கான அதேவிதமான உள்ளமைவுபெற்ற பொறிமுறையொன்று உண்மையைத் தேடுதல் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல் ஆகிய இணைவுமுழுமை வழங்கும் குறியிலக்குகளை இலகுபடுத்த உதவும்.

**விதப்புரை: OMP குற்றவியல் சட்டப்பொறுப்பு சம்பந்தமாக சான்றுகளைக் கண்டறிவதைப்பொறுத்து - தற்போதைய நீதிமுறைமை பகுப்பாய்வு செய்வதற்கு வழிமுறைகள் இல்லாத சான்றுகள் - OMP யினுள் ஒரு சட்டவுரைஞர் அலுவலகமொன்றைத் தாபித்த பின்னர் இடம்பெறவுள்ள ஆரம்பத்திலிருந்ததான குற்றவியல் விசாரணைகளுக்கு வழிசெய்வதற்கான மேலதிக விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இந்த அலுவலகம் OMP சட்டமூலத்தின் 12(i) வாசகத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதுபோன்று வழக்குத்தொடரல் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி செயற்பட வழிவகுக்கும். CPA சாத்தியமான வழக்குத்தொடரல்கள் விடயத்தில் ஆரம்பத்திலேயே தெளிவான தொடர்புகளைத் தாபிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. இது பின்னர் இடம்பெறும் வகைப்பொறுப்புக்கூறவைத்தல் சம்பந்தமான முயற்சிகளைக் குடைகவிழ்க்கக்கூடிய சான்றுகளைத் திரிபுபடுத்துவதைத் தடுப்பதை உறுதிசெய்யும் தடுக்கக்கூடிய விவகாரங்களை உள்ளடக்குவதாகும். OMP அவசியமெனக்கருதும் அலகுகளையும், அணிகளையும் தாபிக்கும் அதிகாரம் சட்டமூலத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. அவசியமான அனுபவம் மற்றும் திறன்களைக்கொண்ட வழக்கறிஞர்கள் இதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல் மிகவும் தீர்மானகரமானதாகும்.**

## 3. OMP பணிப்பாணையின் நோக்கெல்லையை மீளாய்வுசெய்தல்

OMP யின் 27 ஆவது வாசகம் (1) வடக்கு - கிழக்கில் யுத்தத்தின் காரணமாக, நடவடிக்கையின்போது காணாமற்போன படைவீரர்கள் உள்ளிட்ட வகையிலான காணாமற்போன நபர்கள், (2) அரசியல் நெருக்கடிகள் மற்றும் சிவில் நிலைமையில் சீர்குலைவுகள் காரணமாகக் காணாமற்போன நபர்கள், (3) சர்வதேச சட்டம் வரைவிலக்கணம் கூறுவதுபோன்ற பலவந்தமுறையில் காணாமற்போன நபர்கள் என்போரை உள்ளடக்குகின்றது. இவ்வாறாக OMP யின் பணிப்பாணை போராளிகளல்லாத சிவிலியன்களையும், முன்னாள் போராளிகளையும் தழுவுவதாக அமைந்துள்ளது. பாதிப்புற்றோர் குழுக்களும், சிவில் சமூகங்களும் சட்டமூலத்தின் முனைப்பெல்லையின்

[18] *http://www.recom.link/wp-content/up;oads/2014/12/Comparative-Study-on-the-Impact-of-Truth-Commissions.pdf*

உசிதநிலைகுறித்து வேறுபடும் நிலைப்பாடுகளை எடுத்துள்ளனர். சில சிவில் சமூக அமைப்புகள் OMP யின் பணிப்பாணையின் நோக்கெல்லையைக் குறைத்து, அது போராளிகளைத்தவிர்த்து, சிவிலியன் மக்களை மாத்திரம் உள்ளடக்கக்கூடிய வகையில் திருத்தப்படவேண்டுமென்று பிரேரணை முன்வைத்துள்ளன. ஏனையோர் OMP அலுவலகத்தை தனிவேறான இரண்டாகப்பிரித்து, ஒன்று போராளிகளல்லாத சிவிலியன்களுக்கும், இன்னுமொன்று காணாமற்போன படைவீரர்களுக்குமாகச் செயற்பட வேண்டுமென்றும் தெரிவிக்கின்றனர்.

ஏனைய நாடுகளிலுள்ள காணாமற்போனவர்களுக்கான அலுவலகங்கள் இரண்டு அணுகுமுறைகளையும் பின்பற்றியுள்ளன. தென்னாபிரிக்காவில் காணாமற்போன நபர்களுக்கான பணி அணி மற்றும் காணாமற்போன ஆர்ஜன்ரீனாவின் தேசிய ஆணைக்குழு (CONADEP) போன்ற அமைப்புகள் பலவந்தமான மற்றும் தன்விருப்பற்ற காணாமற்போதல்கள் குறித்த விடயநிகழ்வுகளை மாத்திரமே கையாண்டுள்ளன. சைப்பிரஸின் காணாமற்போன நபர்களுக்கான குழு போன்ற, ஏனைய அமைப்புகள் பலவந்தமான முறையில் இடம்பெற்ற காணாமற்போதல்கள் மற்றும் காணாமற்போன படைவீரர்கள் ஆகிய இரண்டையுமே கையாண்டுள்ளன[19].

**விதப்புரை: அரசாங்கம் பலவந்தமான, தன்விருப்பற்ற காணாமற்போதல்கள், மற்றும் ஏனைய காணாமற்போதல்கள் சம்பந்தமாகத் தற்போதுள்ள தகவல்களைப் பரிசீலனைசெய்து, இரண்டு வகைப்பிரிவுகளும் ஒரே அலுவலகத்தில் உள்ளடக்கப்படமுடியுமா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய அவசியமுள்ளது. இலங்கையில் மிகவும் உயர்வான அளவிலான காணாமற்போதல் விடயநிகழ்வுகள் இருப்பதை வைத்துப்பார்க்கும்போது, OMP பணிப்பாணை வேறு வழிகளில் காணாமற்போனவர்களின் விடயநிகழ்வுகளையும் உள்ளடக்கினால், இந்த வழக்குச்சுமை அதற்குரிய கவனத்தைப் பெற்றுக்கொள்ளமாட்டாது எனத் தெரிவிக்கும் கரிசனைக்கவலை உள்ளது. அதேவேளையில், காணாமற்போன படைவீரர்களின் குடும்பங்கள் எழுப்பும் விவகாரங்களுக்கும் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியமாகும். இதற்குமுன்னரான ஆணைக்குழுக்களினதும், விசாரணைகளினதும் பல அறிக்கைகள் சில விடயநிகழ்வுகளில் உதவக்கூடும் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். இவை OMP யின் பணிகளில் சிவற்றைக் குறைக்கலாம். இவ்வாறாக, OMP இதற்குமுன்னர் இடம்பெற்ற விசாரணைகளிலிருந்து தகவல்களைக்கோரிப்பெற்றுக் கொள்வதோடு, கடந்தகால பணிகள் இரட்டிக்கப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.**

**மேலும், பலவந்தமான, தன்விருப்பற்ற காணாமற்போதல்கள் குறித்த வழக்குகள் சுமைக்கு உரிய கவனம்செலுத்தப்பட வேண்டுமென்பதையும், OMP யின் பெயரிடலில் இக்கவனம் பிரதிபலிக்கவேண்டுமென்பதையும் CPA அவதானிக்கின்றது. சகல குடும்பங்களினதும் மனக்குறைகளை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் இனத்துவநிலை, பூகோளநிலை மற்றும் ஏனைய குணவியல்புகளைக் கருத்திற்கொள்ளாது சகல சிவிலியன்களுக்கும் உரிய கவனம் வழங்கப்படுதல் வேண்டும்.**

---

19 ***http://www.newsincyprus.com/news/19604/soldiers-sought-over-nicosia-mystery-grave***

**4. குறிப்பான சில விடயநிகழ்வுகளில் மரணச்சான்றிதழ்களை இல்லாமல் செய்வதற்கும், மற்றும் பிரசன்னமில்லாமை சான்றிதழ் வழங்கவும் அதிகாரமளிக்கும் நிலை மாற்றுக்கால ஏற்பாட்டை வைத்தமைத்தல்**

வாசகங்கள் 13(1)(a)(i), (ii) மற்றும் (v) 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மரணங்கள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் பிரசன்னமின்மை சான்றிதழை வழங்கும் நோக்கத்துக்காக இடைக்கால மற்றும் இறுதிநிலை அறிக்கைகளை வழங்குவதற்கான OMP யின் அதிகாரங்கள் குறித்து எடுத்துரைக்கின்றன[20]. ஆட்களின் பதிவாளர் பிரசன்னமின்மை சான்றிதழை வழங்கும் வகையில் மேற்குறிப்பிட்ட சட்டம் திருத்தியமைக்கப்படும்[21]. மரணங்கள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்த) சட்டமூலம் விசாரணை ஆணைக்குழுவொன்று அல்லது OMP ஒரு நபர் காணாமற் போயுள்ளார் என்பதைக் கண்டறியும்போது, பிரசன்னமின்மை சான்றிதழொன்றை வழங்குவதற்கான ஏற்பாட்டைக்கொண்டுள்ளது.

**விதப்புரை: 8(G) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட பதிவாளரின் அறிக்கை ஒரு நபர் காணாமற்போயுள்ளார் என்பது சம்பந்தமான OMP யின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டமைதல்வேண்டும். இது மாவட்டப் பதிவாளரால் மேலதிக விசாரணையொன்றைக் கோருதல் ஆகாது.**

அத்தோடு, தற்போதுள்ள சட்டத்தின் ஏற்பாடுகள் (வாசகம் 13 ஐப் பார்க்கவும்), இச்சட்டத்தின்கீழ வழங்கப்படும் மரணச்சான்றிதழொன்று மரணமடைந்த நபர் உயிருடன் இருப்பது கண்டறியப்பட்டால் மாத்திரமே இல்லாமற்செய்யப்படக்கூடியதாகும். இதற்குப் பொலிசாரின் விசாரணையொன்று அவசியப்படும். இது பாதிப்புற்றோர் பிரசன்னமின்மைச் சான்றிதழொன்றைப்பெற்றுக்கொள்வதில் அனாவசியமான தாமதங்களை ஏற்படுத்தும். ஆகவே, புதிய சட்டம் நடைமுறைக்குவரும்நேரத்தல், ஏற்கெனவே மரணங்கள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் மரணச்சான்றிதழைப் பெற்றுக்கொண்ட காணாமற்போன நபரின் குடும்ப அங்கத்தினர்கள் பிரசன்னமின்மை சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவிரும்பும் சந்தர்ப்பங்களைத் தழுவும்வகையில் குறித்துரைப்பான நிலை மாற்றுக்கால ஏற்பாடுகள் இருப்பது அவசியமாகும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் மரணச்சான்றிதழை இரத்துச்செய்து, அதற்குப்பதிலாகப் பிரசன்னமின்மைச் சான்றிதழொன்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

**விதப்புரை: குறிப்பிட்ட விடயநிகழ்வுகளில் மரணச்சான்றிதழை இரத்துச்செய்து, அதற்குப்பதிலாகப் பிரசன்னமின்மைச் சான்றிதழொன்றை வழங்குவதற்கு அதிகாரமளிக்கும் ஓர் நிலைமாற்றுக்கால ஏற்பாட்டைக் கொண்டுவருதல் வேண்டும்.**

---

[20] See http:// www.documents.gov.lk/files/act/2010/12/19-2010_E.pdf

[21] *See http://www.documents.gov.lk/files/bill/2016/7/97-2016_E.pdf*